செ.வெ.எண்: 08/ மே நாள்: 03.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## கோடைக்காலத்தில் தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (03.05.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், கோடைக்காலத்தில் தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :

கோடைக்காலம் தொடங்கி வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் பொதுமக்களிடத்தில் குடிநீரின் தேவை இயல்பாகவே அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகிறது. இத்தகைய சூழ்நிலையில் பொதுமக்களின் தேவைக்கேற்ப தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்வது நமது கடமையாகும். குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுத்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டும். குடிநீர் விநியோகம் செய்யும் நீரேற்ற நிலையங்கள், குடிநீர் தொட்டிகளில் இயங்கி வரும் மின் மோட்டார்களில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல் முறையாக கண்காணித்து பராமரித்திட வேண்டும்.

முந்தைய காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்ட பகுதிகளை கணக்கிட்டு அந்தந்த பகுதிகளில் கூடுதல் கவனத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களிடமிருந்து குடிநீர் பிரச்சனை தொடர்பாக புகார்கள் ஏதேனும் வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் காலதாமதமின்றி உடனடியாக ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குடிநீர் குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத பகுதிகளில் டேங்கர் லாரிகளின் மூலம் குடிநீர் விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி உள்பட அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**